**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 1, - 2016**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், அப்போதைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைசரயஅலஇைவ தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வடக்கு அநுராதபுரம் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்திை மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2.	நிதிகூற்றுக்கள்**

**2.1	அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ)	செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ)	ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ)	சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ)	எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ)	கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

**2.2.	நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1	நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களானது 2017 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 14 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2	கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)	ரூபா 6.61 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகளின் பெறுமதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு என்பன அதே தொகையால் குறைத்தக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ)	2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 437.27 மில்லியன் பெறுமதியான நடைபெறும் வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 431.92 மில்லியன் தொகையான நடைபெறும் வெலைகளின் நேரொத்த பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 5,166 | 8,726 | 75.00 | 76.04 | 98.91 | 369.46 | 446.44 |
| இலங்கை அரசாங்கம் | 1,651 | 2,789 | 63.45 | 29.14 | 39.05 | 135.78 | 164.49 |
| மொத்தம் | 6,817 | 11,515 | 138.45 | 105.18 | 137.96 | 505.24 | 610.93 |

செயற்திட்ட காலப்பகுதியான 60 மாதங்களில், 46 மாதங்கள் கடந்த பின்னர் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,166 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 7.15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 446.44 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 369.46 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் செலவினப் பட்டியலின் 42 ஆம் பந்தியின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஜப்பான் யென் 2,604 மில்லியன் விடுவிக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஆகவே, பணவளிப்பு செய்யப்படாத மிகுதிக் கடனில் கடனளிக்கும் முகவரால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19.92 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 3.2. பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 26.95 சதவீதம் மற்றுத் 5.77 சதவீதமாக இருந்தது. தண்ணீர் தேக்கங்கள், தண்ணீர் சுத்திகரிப்பு பொறி, நிலக்கீழ் நீர்த்தேக்கம், உர்த்தப்பட்ட தண்ணீர் தொட்டிகள், எந்திரவியல் மற்றும் மின்பொறியியல் வேலைகள், மற்றும் லொட் ஏ இன் கீழான கட்டிடங்கள் மற்றும் பிரதான பரிமாற்றம் மற்றும் துணைப் பரிமாற்ற பிரதான விநியோகம் போன்ற பிரதான நிர்மாண ஒப்பந்தங்கள் 2018 பெப்ரவரி மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தங்களின் வழங்கல் உள்ளடங்கலான கொள்வனவுச் செயற்பாடுகள் 2017 யூன் 30 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. உரிய உத்தியோகத்தர்களின் நிர்ணயிக்கின்ற பெறுப்புக்களுடன் பௌதீக மற்றும் நிதி இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற விரிவான செயல்நடவடிக்கை திட்டமின்மை காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மெதுவான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் அமுலாக்கல் பட்டியலின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைகளிற்காக பொருத்தமான சேவை வழங்குநரின்

கொள்வனவு 2013 பெப்ரவரி முதல் செப்தெம்பர் வரையான காலத்திற்காக பெறப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆலோசனை சேவைகளிற்கான ஒப்பந்தம் 2014 யூன் 13 இலேயே வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்டத்தின் சகல நடடவடிக்கைகளும் 15 மாதங்களிற்கு மேலான தாமதத்துடன் தொடங்கப்பட்டிருந்தது.

(ஆ) லொட் சீ 1 இன் கீழான இன்சிபொஸ்சகல விநியோக வலயம் மற்றும் லொட் சீ 3 இன் கீழான கிழக்கு றவேவ, எத்தன்கட மற்றும் றவேவ விநியோக வலயம் என்பவற்றில் விநியோக முறைமை கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் முறையே 2015 மே மாதத்திலும் 2015 திசெம்பர் மாதத்திலும் வழங்கப்பட்டு நிர்மாண வேலைகள் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தங்கள் முறையே 2016 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வழங்கப்பட்டு நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்சிபொஸ்சகல விநியொக வலயத்தின் கீழான 112.7 கீலொமீற்றரில், 4.1 கிலோமீற்றரும் கிழக்கு றவேவ, எத்தன்கட மற்றும் றவேவ விநியோக வலயத்தின் கீழான 125.15 கிலோ மீற்றரில், 2.26 கிலோ மீற்றரும் மாத்திரம் குழாய் பொருத்துதல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தங்களின் கீழான நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் காலம் செயற்திட்ட நடவடிக்கைகளின் உரிய பூர்த்தியாக்கல் திகதியை கருத்திற்கொள்ளாமல் 2018 ஏப்ரல் வரை மாற்றப்பட்டிருந்தது.

## 3.4 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 19 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்ட கணக்காளர் பதவி அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 31 வரையும் இந்த பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை மாதத்தின் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.